**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF THE UNIT OF M/s.S.J. NATURAL MINERALS MULTI - COLOUR GRANITE QUARRY, KARISALPATTI VILLAGE, SATTUR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 04.11.2020 AT 11.00 A.M IN M/S. ARULMIGU VANNI VINAYAGAR TEMPLE - MADAM, CHINNAODAIPATTI, VANNIVINAYAGAR NAGAR, SATTUR TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | R. Kannan, I.A.S., | : | District Collector,<br>Virudhunagar . |
| 2 | R. Mangalarama subramaniyan | : | District Revenue Officer,<br>Virudhunagar. |
| 3 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | M. Kasi Chelvi | : | Revenue Divisional Officer,<br>Sattur |
| 5 | Project Proponent and public | : | 62 Nos (List enclosed) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Collector, Virudhunagar, Revenue officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed project of the M/s.S.J. Natural Minerals Multi - Colour Granite Quarry, Karisalpatti Village is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinamani" and " Indian Express" dated 22.09.2020. He informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

He also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority.

The District Collector, Virudhunagar initiated the Public Hearing process. Further, the District Collector requested the project proponent to explain about their proposed project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thiru. T.Palanivel Murugan, Partner, M/s.S.J. Natural Minerals Multi - Colour Granite Quarry welcomed everyone and briefed about the project proposal and requested their environmental consultant to make presentation about the proposed project.

The Environmental consultant of the project has made presentation on the project to the public along with Environmental Management Plan.

The views of the Public attended the Public Hearing and the replies of the project proponent on their concerns are detailed below.

**Thiru. S. Velusamy, Panchayat Union Councillor, Sattur Panchayat Union.**

He pointed out the following.

- The proposed quarry activity should not be a hindrance to the any of the water ways in the vicinity of the project area.
- Fencing to be provided around the boundary of the proposed mining area to prevent the entry of cattles so as to protect them.
- Requested to provide employment to the local public.

Finally he welcomed the project.

**Project Proponent:**

The project proponent replied that their activities will not be a hindrance to any water ways. They will provide necessary fencing around the boundary before commissioning the project. Also he assured to provide employment to the local public.

**Thiru.Balakrishnan, Padanthal.**

I am working in match industry and is a temporary job and requested to provide permanent job in the proposed project.

**Project Proponent:**

Assured to consider the request to provide employment based on the qualification.

**Thiru.Anbalagan, Chinnathappapuram**

The quarry activities will spoil the road in the vicinity of the area due to movement of heavy vehicles. The agriculture activities in this area is totally dispending on rain, since there is no wells for irrigation. So, he requested to provide employment to the local public based on their qualification. Also, he requested to provide fencing around the boundary of the project site to protect the cattles. Also, he demanded necessary assistance to the local villagers.

**Project Proponent:**

The project proponent assured to transport the quarried materials without damaging the roads in the vicinity of the area. Further, he assured to provide fencing around the boundary and to provide employment to the local public and render necessary assistance to local villagers.

**Thiru.Sathiskumar, Chinnakollampati and Thiru.Karuppasamy, Karuppanaickenpatti**

Both requested to provide employment for them.

**Project Proponent:**

Assured to provide employment based on the qualification.

**Thiru.Rajendiran, Ex.Panchayat President, Pethureddiapatti**

He welcomed the project and requested to provide necessary infrastructure facilities to the local public.

**Project Proponent:**

The project proponent accepted to help for providing necessary basic infrastructure to nearby villagers.

**Thiru.Sahul hamid, N.G.O. Colony, Sattur.**

Requested to provide employment opportunities for local villagers and to provide necessary assistance for students education.

**Project Proponent:**

The project proponent accepted to help for providing necessary basic infrastructure to nearby villagers and to help students education.

**Thiru.Annadurai, Sattur**

Requested to provide employment to him.

**Project Proponent:**

Assured to provide employment based on the qualification.

**Thiru.Thavasi, H/o.Karisalpatti Panchayat President**

Requested the project proponent to provide water facilities and toilet facilities to the nearby villages.

**Project Proponent:**

Accepted to provide necessary help to provide water facilities and toilet facilities.

**District Revenue Officer, Virudhunagar**

Requested to assist for providing toilet facilities to all houses in the nearby villages who have not been provided with toilers to avoid open defecation.

**Project Proponent:**

The Project proponent whole heartedly accepted to provide necessary assistance for the implementation of toilets in the houses in the nearby villages who have not provided the same.

After this, since no one came forward to give opinion/view on the project, the District Collector has invited the public to offer their further more views if any. Thereafter, there was no further response from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

List of public attended the public hearing along with recorded video(CD) of the entire proceedings, suggestions and petitions received through E mail and directly are enclosed herewith.

District Environmental Engineer,
TNPC Board, Virudhunagar.

District Collector,
Virudhunagar.

திி/ள்.எஸ்.ஜே. நேச்சுரல் மினரல்ஸ் மல்டி - கலர் கிரானைட் குவாரி, கரிசல்பட்டி கிராமம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 04.11.2020 முற்பகல் 11.00 மணியளவில் அருள்மிகு. வன்னிவிநாயகர் கோவில் - மடம், சின்னஓடைப்பட்டி, வன்னிவிநாயகர் நகர், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | இரா. கண்ணன், இ.ஆ.ப | : | மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர். |
| 2 | திரு.இரா.மங்களராமசுப்பிரமணியன் | : | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர். |
| 3 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 4 | திருமதி. எம். காசிசெல்வி | : | கோட்ட வருவாய் அலுவலர், சாத்தூர் |
| 5 | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 62 எண்கள் (விவரம் இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். எஸ்.ஜே. நேச்சுரல் மினரல்ஸ் மல்டி - கலர் கிரானைட் குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர், வருவாய்த்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும் இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே "தினமணி" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.09.2020 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இத்திட்டம்

தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலையின் உரிமையாளரின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் மூலம் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர், அவர்கள் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தின் உரிமையாளர்களை திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறி இத்திட்டம் தொடர்பான சந்தேகங்களையும், விளக்கங்களையும் கேட்குமாறு பொது மக்களை கேட்டுக் கொண்டார்.

பின்பு தி/எ். எஸ்.ஜே. நேச்சுரல் மினரல்ஸ் மல்டி - கலர் கிரானைட் குவாரி பங்குதாரர் திரு. T. பழனிவேல் முருகன் வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று திட்ட விளக்கவுரையாற்றினார். மேலும், தங்களது சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாக தொடர்ந்து விளக்கவுரை ஆற்றுவார் என்று கூறினார். இதன்பிறகு சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இதுதொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன்பின்பு இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள், சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பங்குதாரர் அளித்த விபரங்கள் பின்வருமாறு.

<u>திரு.வேலுச்சாமி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர், சாத்தூர் பஞ்சாயத்து யூனியன்</u>

இவர் கீழ்க்கண்ட விபரங்களை தெரிவித்தார்.

- தொடங்கப்படவுள்ள இந்த சுரங்கத்திட்டம் அப்பகுதியில் உள்ள நீர்வழி ஆதாரங்களுக்கு எந்த இடையூரையும் ஏற்படுத்தக்கூடாது.
- சுரங்கப்பகுதியை சுற்றிலும் வேலி அமைத்து கால்நடைகள்,

சுரங்கப்பகுதிக்குள் செல்லாமல் இருக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- ❖ உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கவேண்டும்.

<u>திட்டத்தின் பங்குதாரர்.</u>

இத்திட்டத்தினால் எந்த நீர்வழி ஆதாரங்களுக்கும் இடையூறு இருக்காது என்றார். மேலும், சுரங்கப்பகுதியை சுற்றி வேலி அமைக்கப்படும் என்றும் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

<u>திரு.பாலகிருஷ்ணன், படந்தால்</u>

நான் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையில் தற்காலிக பணியாளராகப் பணியாற்றிவருகிறேன். எனக்கு தொடங்கப்படவுள்ள இத்திட்டத்தில் நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

<u>திட்ட பங்குதாரர்</u>

தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

<u>திரு. அன்பழகன், சின்னதப்பபுரம்</u>

இந்த சுரங்கப் பணிகளினால் கனரக வாகனங்கள் இயக்குவதன் மூலம் அப்பகுதியில்உள்ள சாலைகள் பழுதடையாமல் இருக்க, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றார். மேலும் இப்பகுதி முழுவதும் மழையை நம்பியே மட்டும் விவசாயம் இருப்பதால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் இத்திட்டத்தில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் சுரங்கப்பகுதிகளை சுற்றிலும் வேலி அமைத்து கால்நடைகள் புகாத வண்ணம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என கேட்டு இப்பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும் கேட்டுக்கொண்டார்.

திட்ட பங்குதாரர்

சாலைகள் பழுதடையாவணணம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் கனரக வாகனங்கள் மூலம் எடுத்துச்செல்லப்படும் என்றார். மேலும் சுரங்கப்பகுதியைச் சுற்றிலும் வேலி அமைக்கப்படும் என்றும் கூறினார். உள்ளூர் மக்களுக்கு வேலை வாயப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் மற்றும் உள்ளூர் மக்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும் என்றார்.

திரு.சதீஸ்குமார், சின்னகொல்லம்பட்டி மற்றும் திரு.கருப்பசாமி, கருப்பநாயக்கன்பட்டி

இவர்கள் தங்களுக்கு வேலை வாயப்பு வழங்கவேண்டும் எனக் கோரினர்.

திட்ட பங்குதாரர்

தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

திரு.ராஜேந்திரன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர், பெத்துரெட்டியபட்டி.

இத்திட்டத்தினை வரவேற்றார். உள்ளூர் மக்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை செய்துதர வலியுறுத்தினார்.

திட்ட பங்குதாரர்

உள்ளூர் மக்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்துதர தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

திரு.சாகுல் ஹமீது, என்.ஜி.ஓ.காலனி, சாத்தூர்

உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் என்றும், மாணவர்களின் கல்விக்கு உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திட்ட பங்குதாரர்

உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் மற்றும் மாணவர்களின் கல்விக்கு உதவி வழங்கப்படும் என்றும் கூறினார்.

திரு.அண்ணாதுரை, சாத்தூர்

வேலை வாய்ப்பு வழங்க வேண்டினார்.

திட்ட பங்குதாரர்

தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்

திரு.தவசி, கரிசல்பட்டி, ஊராட்சி ஒன்றியத்தலைவரின் கணவர்

அருகில் உள்ள கிராமங்களுக்கு தண்ணீர் வசதி மற்றும் கழிப்பறை வசதியை செய்து தர கேட்டுக்கொண்டார்.

திட்ட பங்குதாரர்

அருகில் உள்ள கிராமங்களுக்கு தண்ணீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி செய்து தர தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர்

அருகில் உள்ள கிராமங்களில் திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தவிர்க்க கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறை கட்டித்தர நிறுவனம் உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

திட்ட பங்குதாரர்

அருகில் உள்ள கிராமங்களில் கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறை கட்டித்தர தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இதன் பின்பு இத்திட்டம் தொடர்பான கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில் கூட்டத்தில் இதுவரை நடந்த நடவடிக்கைகளை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு, இணையவழியாக மற்றும் நேரடியாக பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மனுக்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர்.